# மகிந்த, ரஜனிக்கு விடுத்த இரகசிய அழைப்பு

## – ரோ பாதுகாப்பு –

சிறீலங்கா திரைப்பட விழாவில் எப்படியாவது பங்கேற்க வேண்டும் என்று ரஜினிக்கு சிறீலங்கா ஜனாதிபதி இரகசிய தூது அனுப்பியுள்ளார். ஆனால் அதை அவர் வந்த வேகத்திலேயே தூக்கி எறிந்தார், என்று கவிஞர் தாமரை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அடுத்த வாரம் துவங்கும் சர்வதேச திரைப்பட விழாவில் எப்படியாவது இந்தியாவின் முதல் நிலைக் கலைஞர்களைப் பங்கேற்க வைத்துவிட வேண்டும் என்பதில் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறது சிறீலங்கா அரசு. ஆனால் இதற்கு தமிழ் திரையுலகம் மசியவில்லை. சீமானின் நாம் தமிழர் இயக்கம் மற்றும் தமிழ் திரையுலகம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி இந்த விழாவின் தூதராக இருந்த அமிதாப் அந்தப் பதவியிலிருந்தே விலகிக் கொண்டார். அந்த விழாவுக்குப் போகமாட் டேன் என்றும் கூறிவிட்டார். புதிய தூதராக சல்மான் கான் பொறுப்பேற்றுள்ளார்.



அமிதாப் குடும்பத்திலி ருந்து அபிஷேக், ஐஸ்வர்யா ராய் என யாருமே இந்த விழாவில் பங்கேற்க மாட்டோம் என் அறிவித்துள்ளனர். இதனை சிறீலங்கா அரசு முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. எனவே, பொய்யான பிரச்சாரங்களில் ஈடுபட்டு, முன்னணி இந்தியக் கலைஞர்கள் அனைவரும் கொழும்பு வருவார்கள் எனக் கூறி வருகிறது.

இந் நிலையில், உலகம் முழுவதும் தமிழ் ரசிகர்களைக் கொண்ட சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை இந்த விழாவுக்கு வருமாறு சிறீலங்கா அரசு சார்பில் சென்னையில் உள்ள சிறீலங்கா தூதரகம் அழைப்பிதழ் கொடுத்தது. பொதுவாக, ஒரு மரியாதைக்காகவாது இதுபோன்ற அழைப்பிதழ்களைப் பெற்றுக் கொள்ளும் ரஜினி, இந்த அழைப்பிதழைப் பெறவும் மறுத்துவிட்டார். அவரது அலுவலகமும் இந்த அழைப்பிதழைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்தச் செய்தி வெளியில் தெரிந்த பிறகுதான், தமிழ் திரையுலகம் வேகத்துடன் செயல்பட்டு விழாவைப் புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தது. இந் நிலையில் ராஜபக்ச இரகசியமாக தூது அனுப்பியுள்ளார் ரஜினிக்கு. எப்படியாவது இந்த விழாவில் ரஜினி பங்கேற்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால் ராஜபக்சவின் தொடர்புக்கு வராத ரஜினி, அவரது அழைப்பையும் எடுத்த எடுப்பில் புறக்கணித்து, இனியொருமுறை இதுபற்றிப் பேசவோ யாரும் தன்னைத் தொடர்பு கொள்ளவோ வேண்டாம் என்று வேகமாகக் கூறியுள்ளார்.

இந்தத் தகவலை ஒரு பேட்டியில் கூறியுள்ளவர், கவிஞர் தாமரை. அவர் கூறுகையில்,'தமிழ் மக்களைக் கொன்றொழித்துவிட்டு ஒன்றும் நடவாததுபோல இருக்க சிறீலங்கா அரசு முயல்கிறது. இதை இப்படியே விட்டுவிட முடியாது. இவ்வளவுக்கும் பிறகும், சிறீலங்கா அரசுத் தரப்பில் திரை உலகினரைத் தனிப்பட்டரீதியில் தொடர்புகொண்டு வசப்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. இந்த `ஐஃபா` விழாவில் கலந்துகொள்ளுமாறு ரஜினிகாந்துக்கு ராஜபக்ச தூதுவிட்டார். ஆனால், ரஜினி அதை வந்த வேகத்தில் நிராகரித்துவிட்டார் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ஜுன் 3 முதல் 5ம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்பட விழாவின் பாதுகாப்பு பணிகளுக்காக இந்தியாவின் `றோ` உளவுப் பிரிவு இலங்கை சென்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

றோ அமைப்பு தவிர, இந்தியாவின் முக்கிய பாதுகாப்புப் படையணிகள் சிலவும் ஏற்கெனவே இலங்கையில் இந்த விழாவுக்காக முகாமிட்டுள்ளதாக இலங்கைத் தமிழ் இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தியாவின் உயர் உளவுத் துறையான றோ மற்றும் சில பாதுகாப்புப் படைப் பிரிவுகள் கொழும்பில் முகாமிட்டுள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இந்திய திரைப்பட விழா என்ற பெயரில் கொழும்பில் நடக்கும் இந்த விழாவை இந்திய தொழில் கூட்டமைப்பு (ஃபிக்கி) நடத்துகிறது. இதற்காக இந்திய திரை நட்சத்திரங்கள் பலரையும் கொழும்பு கொண்டு வர மிகத் தீவிரமாக முயன்று வருகிறது சிறீலங்காவும் இந்திய அதிகார வர்க்கமும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சில தமிழக திரைப்பட கலைஞர்கள் மட்டுமே எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும், இதனை பொருட்டாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்றும் சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆனால், தமிழ் நட்சத்திரங்கள் அனைவரும் இந்த விழாவைப் புறக்கணித்ததுடன், மற்ற மொழிக் கலைஞர்களும் இதில் பங்கேற்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.




கறையான் புற்றெடுக்குமாம், பாம்பு வந்து அதிலை குடியேறுமாம்.

### கோத்தபாயவின் கனக்கு

விடுதலைப் புலிகளை மீண்டும் நாட்டில் தலையெடுக்க விடப்போவதில்லை என்று மகிந்த சிந்தனைக் குடும்ப வாரிசுகளில் ஒன்றான கோத்தபாய ராஜபக்ச சொல்லியிருக்கிறார். யுத்த வெற்றியை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்தத் தெனாவெட்டை அவர் வெளியிட்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் ஒண்டும் தானாய் பிறப்பெடுக்கேலை. தங்கட மூதாதையர்கள் செய்த அடக்குமுறைகளும், அட்டூழியங்களும்தான் விடுதலைப் புலிகள் பிறக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினது எண்டதை கோத்தபாய மறந்துபோனராக்கும். அன்றைக்குச் செய்த அடக்குமுறைக்கே அந்தளவுக்கு கொதித்தெழும்பியவர்கள் என்றால், இன்றைக்கு நடக்கிற அடக்குமுறைகளுக்குள்ளையும், இன அழிப்புக்குள்ளையும் இருந்து எத்தனை விடுதலைப் புலிகள் பிறப்பெடுப்பார்கள் என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். சுனாமியின் ஆக்ரோசம் கடலுக்கு மேலை நிக்கிறவரைக்கும் தெரியாது. உள்ளுக்குள்ளைதான் ஒரு பிரளயமே நடந்து கொண்டிருக்கும். அது கரையை வந்து மோதும் போதுதான் அதன் அகோரத் தாண்டவத்தை அறிந்து கொள்ள முடியும். இனத்தை அழிக்கிற உங்களுக்கு இத்தனை திமிர் இருக்குமெண்டால், அழிபடுகிற இனம் எத்தனை ஆக்ரோசத்தோடு இருக்கும் எண்டதை கோத்தபாய புரிஞ்சுகொள்ளுறதுக்கு அதிக காலம் எடுக்காது.

**அதுசரி, சாதுகள் மிரண்டால் காடுகள் தாங்குமா..?**

### சுரண்டல்ச் சண்டியர்

கறையான் புற்றெடுக்குமாம், பாம்பு வந்து அதிலை குடியேறுமாம். நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயர்ந்த தமிழர்களும் முன்வரவேண்டும் என ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்திருக்கிறார். முன்னர் சமாதானப் புறா வேடம் போட்டு புலிகளோடு பேச்சு மேடைகளிலை கைகுலுக்கினவர், இப்ப சண்டியராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு புலம்பெயர் புலி அழிப்பு நடவடிக்கையிலை இறங்கியிருக்கிறார். புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும் இன்னொரு முள்ளிவாய்க்கால் இரத்தச் சகதிக்குள் மூழ்கடித்துப் பார்க்கவேண்டும் என்றதுதான் இவரின்ரையும் இவற்றை கூட்டத்தின்ரையும் சித்தாந்தமும், சிந்தனையுமாக இருக்கின்றது. புலனாய்வு செய்கிறோம், புடலங்காய் பிடுங்கிறோம் என்று புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு எச்சிரிக்கையை விட்டுக்கொண்டு, இன்னொரு பக்கம் தமிழற்றை உழைப்பைச் சுரண்ட வழிகள் தேடுகினம். கடத்தியும், காணாமல் போகச்செய்தும் கப்பம் வாங்கிய கைகளுக்கு இப்ப அந்த வசதிகள் குறைவடைந்துபோனதால் புதிய வழியில், புதிய சிந்தனையில் புறப்பட்டிருக்கினமாக்கும்? சிங்களப் படையினர் தமிழரையும் அழித்து, தமிழற்றை சொத்தையும் அழிப்பார்கள். அதனை மீளக் கட்டியெழுப்ப கேணைத் தமிழர்கள் முன்வரவேண்டும் என்பதுதான் இவர்களது எதிர்பார்ப்புபோலும். தாய்ப் பசுவின் மடியை அறுத்துவிட்டு, அதுக்கு புண்ணாக்கு வாங்க காசு தா என்று கேட்பவர்கள் இவர்கள். தன் இனம் அழிந்ததைக்கூட பொருட்படுத்தாமல், முதலுடன் ஒட சில முட்டாள் தமிழர்கள் முன்வரலாம். மருந்துக்கு ஒன்றும் வலியில்லை, புண்ணுக்குத்தான் வலி. ஆற்நிலை போட்டாலும் போய்ச் சேரப்போறது கடலுக்குத்தான் என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

**அதுசரி, தன் விரல்களே தன் கண்ணை குத்திக்கொள்ள அனுமதிக்குமா?**

### தலைவரின் இருப்பு

'அவனின்றி ஒரு அணுவும் அசையாது' என்பது தமிழர் வியடத்தில் சரியாகத்தான் இருக்கும். தலைவர் இருக்கிறாரா இல்லையா என்பதுதான் திரும்பவும் தமிழ் மக்களுக்கு மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாக உருவெடுத்திருக்கு. இல்லையென்று சொல்லி மகிழ்ந்திட ஒரு சிறு கூட்டமும், இருக்கிறார் என்று நம்பிக்கையில் அவர் வழி நடந்திட இன்னொரு பெரும் கூட்டமும் தாயாராய்தான் இருக்கு. இந்திய இராணுவம் காட்டினைச் சுற்றிவளைத்து எல்லாம் முடிந்துவிட்டதாக, நெற்றிப் பொட்டில் வைத்ததாக படம் கூடக் காட்டியது. மக்கள் அப்பவும் இருக்கிறாரா? இல்லையா என்று சந்தேகங்களோடு தான் வாழ்ந்தவை. மூன்று வருடங்களுக்கு மேலா



கியது உண்மை தெரியவர. இந்திய இராணுவம் வெளியேறிய பின்னரும் மக்களுக்கு சந்தேகம் தீரவில்லை. வந்திருப்பது பிரபாகரனில்லை முகமாற்றம் செய்த பினாமி என்று சுனாமியாய் கதை வளர்ந்தது. போன வருசம் சிறீலங்கா காட்டிய படங்களும், கட்டிய கதைகளும் திரும்பவும் எல்லாரையும் குழப்பிவிட்டிருக்கு. இந்தக் குழப்பங்களுக்கு நல்ல தொரு பதிலை தமிழ்தேசிய கூட்டமைப்பின்ரை நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சொல்லியிருக்கிறார். 'தமிழீழத் தேசியத் தலைவர் இருக்கிறாரா? இல்லையா' என்பதை தமிழ் மக்கள் தாங்களாகவே புரிந்து கொள்ள வேண்டும். கடந்த வருடம் மார்ச் 17ம் திகதி கொல்லப்பட்டாரென சிறீலங்கா அரசாங்கம் முதலில் அறிவித்தது. இல்லை 18ம் திகதிதான் அவர் கொல்லப்பட்டாரென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்தார். யுத்த முனையில் நின்று படையினரை வழிநடத்திய வரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா 19ம் திகதி தான் கொல்லப்பட்டார் என்று ஒரு வருடத்தின் பின்னர் தெரிவித்துள்ளார். எதிர் காலத்தில் வேறு தரப்பினர் கூட வேறு வேறு திகதிகளைச் சொல்லக்கூடும்? என்று அவர் சொல்லியிருக்கிறார்.

**அதுசரி, குழம்பிப்போனது தமிழ் மக்கள் மட்டுமில்லை, சிங்களத் தரப்பும் தானாக்கும்?**